2020 ஜனவரி 9]

(ஆ) கடையநல்லூர் தொகுதி, சொக்கம்பட்டி, காவல் துறை வாகனம் மோதி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

முற்பகல் 11–10

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட சொக்கம்பட்டி ஊராட்சியில், திரிகூடபுரம் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த மைதீன் பிச்சையினுடைய மனைவி ஆயிஷால் பீவி என்கிற மல்லிகா, வயது 36, அதே மைதீன் பிச்சையினுடைய மகள் இர்ஃபானா ஆஷிகா, வயது 15; அதே எதிர் தெருவைச் சேர்ந்த தீன் ஒலி மகள் கன்சால் மஹரிபா, வயது 40 ஆகிய மூன்று பேரும் இரண்டு மாதத்திற்கு முன்பு 9–11–2019 அன்று பேருந்தில் ஏறுவதற்காக சாலையின் ஓரமாக நின்றிருந்தபோது, காவல் துறை வாகனம் அங்கே வந்து அத்துமீறி அவர்கள் மீது மோதி கடுமையான அளவில் படுகாயங்கள் அடைந்த அந்த மூன்று பெண்களுமே சிகிச்சை பலனளிக்காமல் ஓரிரு தினங்களிலே இறந்துவிட்டார்கள். அந்த ஏழைப் பெண்கள் ஒரே தெருவில் எதிரெதிர் வீட்டைச் சேர்ந்தவர்கள். அந்த 3 பெண்கள் இறந்த செய்தி அங்கே மிகப் பெரிய வருத்தத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. அதன் பிறகு, தேர்தல் காலம் என்பதால் எங்களுடைய தென்காசி மாவட்டத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பு காரணத்தினால் நிவாரணத் தொகை ஒருவருக்கு மட்டும்தான் குறைந்த அளவில் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, பாதிக்கப்பட்ட அந்த 3 ஏழைப் பெண்களினுடைய குடும்ப நிலையையும் கருத்தில்கொண்டு, மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வின்போது எப்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தாராளமாக நிவாரணத் தொகையாக ரூ.10 இலட்சத்தை அறிவித்தீர்களோ, அதுபோன்று கருணையுள்ளத்தோடு, இந்த 3 நபர்களுக்கும் ரூ.10 இலட்சம் நிவாரணம் வழங்க வேண்டும். அதேபோன்று மனைவியையும், மகளையும் இழந்திருக்கக்கூடிய ஏழைத் தொழிலாளி மைதீன் பிச்சை அவர்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென நேற்றும் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையைக் கருணையோடு பரிசீலித்து, பாதிக்கப்பட்ட அந்த ஏழைக் குடும்பத்திற்கு, அதுவும் காவல் துறை வாகனம் மோதி பாதிக்கப்பட்ட இவர்களுக்கு,*

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2020 ஜனவரி 9

தாராளமான மனதோடு, கருணை உள்ளத்தோடு நிதி உதவியையும், அரசு வேலைவாய்ப்பையும் வழங்கவேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்து மற்றும் வன விலங்கினால் தாக்கப்பட்டு உயிரிழந்தோர் குடும்பங்களின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் ஆகியோர் கோரிக்கை வைத்தனர்.*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பென்ஜமின் அவர்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற விபத்தில் இறந்த திரு. ஏகேஷ் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வேண்டி கோரிக்கை வைத்தார்.

இக்கோரிக்கைகளைப் பரிசீலித்து, கீழ்க்கண்டவாறு நிவாரணம் அறிவிக்கின்றேன்:

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சொக்கம்பட்டி கிராமம், கொல்லம்–திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் காவல் வாகனத்தின் டயர் வெடித்ததில், கட்டுப்பாட்டை இழந்த வாகனம் பேருந்து நிறுத்தம் அருகில் நின்றிருந்தவர்கள்மீது மோதியது. இவ்விபத்தில் திருமதி ஆயிஷால் பீவி என்கிற மல்லிகா என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும், திரு. தீன் ஒலி என்பவரின் மகள் செல்வி கன்சால் மஹரிபா மற்றும் திரு. மைதீன் பிச்சை என்பவரின் மகள் செல்வி இர்ஃபானா ஆஷிகா ஆகியோர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை அறிந்த உடனேயே, உயிரிழந்த திரு. மைதீன் பிச்சை என்பவரின் மனைவி திருமதி ஆயிஷால் பீவி என்கிற மல்லிகா அவர்களின் குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்திருந்தேன்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த திரு. தீன் ஒலி என்பவரின் மகள் செல்வி கன்சால் மஹரிபா

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மற்றும் திரு. மைதீன் பிச்சை என்பவரின் மகள் செல்வி இர்ஃபானா ஆஷிகா ஆகியோரின் குடும்பத்திற்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) ஆத்தூர் தொகுதி, தெத்துப்பட்டி, யானை தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், ஆத்தூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட தெத்துப்பட்டி கிராமத்தைச்சேர்ந்த திரு. வேலுச்சாமி என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் யானை தாக்கி உயிரிழந்ததற்கு அன்னாரது குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் வனத் துறைமூலம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஈ) காஞ்சிபுரம் மாவட்டம், மாரிமங்கலம், ஆட்டோவில் கடத்தப்பட்டவரைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரிழந்த திரு. ஏகேஷ் மற்றும் சில இளைஞர்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கூட்டுச் சாலையில், இரவு பணி முடிந்து வீடு செல்வதற்காக 25–12–2019 அன்று ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மாரிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. லோகநாதன் என்பவரின் மனைவி திருமதி பவானி என்பவர், ஆட்டோ ஓட்டுநர் வழி மாறி வேறு பாதையில் செல்வதையும், ஆட்டோ ஓட்டுநரின் அத்துமீறலாலும் தன்னைக் காப்பாற்றும்படி கூச்சலிட்டதில், அலறல் சத்தம் கேட்டு சாலையோரம் நின்றிருந்த இளைஞர்கள் திரு. ஏகேஷ், திரு. ஈஸ்டர் பிரேம்குமார், திரு. வினீத், திரு. சார்லிபன் மற்றும் திரு. பிரிஸ்டன் பிராங்களின் ஆகியோர், இரு சக்கர வாகனத்தில், ஆட்டோவைத் துரத்திச் சென்று திருமதி பவானியைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.*

இளைஞர்கள் ஆட்டோவைத் துரத்திக்கொண்டு வருவதை அறிந்த ஆட்டோ ஓட்டுநர், ஆட்டோவை விரைவாக ஓட்ட, திருமதி பவானி ஆட்டோவிலிருந்து குதித்தார். இதனைப் பார்த்த பொதுமக்கள், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.